2013 மே 2]

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வங்கியின்மீது கருணை காட்டி, அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரிய முதலாளிகளிடத்திலே சொல்லி, வைப்பு நிதி திரட்டி, அந்த வங்கிக்குக் கொடுத்து, அந்த வங்கியைப் புனரமைப்பதற்கு அவரும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, அரசும் தன்னுடைய கடமையைச் செய்யவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அந்த வங்கி சிறப்பாகச் செயல்படுவதற்கு துறைரீதியாக அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள் சொன்ன கருத்தும், நான் சொன்ன கருத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

வினா வரிசை எண் 372, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

372—

பாலம் கட்டுதல்

***6488—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி, தாழையூத்து கடைவீதி பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

[2013 மே 2

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி, தாழையூத்து கடைவீதி பகுதி, தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச்சாலையில் 3.5 மீட்டர் அகலத்தில் சுரங்க நடைபாதை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அமைக்கப்பட உள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *காலத்தை வென்றவர் நீ! காவியமானவர் நீ! வேதனை தீர்ப்பவர் நீ! விழிகளில் நிறைந்தவர் நீ! (மேசையைத் தட்டும் ஒலி) விழிகளில் மட்டுமல்ல, உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயத்திலும் நிறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் திருநெல்வேலி தொகுதியில் நாரணம்மாள்புரம் பேரூராட்சி, சங்கர் நகர் பேரூராட்சி ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்த இரண்டு பேரூராட்சிகளும் மிகப் பெரிய பேரூராட்சிகள்; அதிக மக்கள்தொகை கொண்ட பேரூராட்சிகள் ஆகும். அங்கே, இரண்டு பாலங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு பாலங்களின் மேல்புறம் கிட்டத்தட்ட 10 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகள் இருக்கின்றன. சங்கர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2,500 மாணவர்கள் படிக்கின்றனர்; சங்கர் பாலிடெக்னிக்கில் 1,200 பேர் படிக்கின்றனர்; ஜெயேந்திரா மெட்ரிக் பள்ளியில் 2,500 பேர் படிக்கின்றனர்; சாரதா மெட்ரிக் பள்ளியில் 600 மாணவர்கள் படிக்கின்றனர். அதுபோல, சாலைக்குக் கீழ்ப்பக்கம் பார்த்தோமென்றால், சத்திரம்குடியிருப்பில் 1,800 மாணவர்கள் படிக்கின்றனர். சாலைக்கு மேல்புறம் தாழையூத்து கிராமம், நாஞ்சான்குளம், தென்களம் போன்ற 10 கிராமங்களில் சுமார் 30,000 மக்கள் வாழ்கின்றனர். சாலைக்குக் கீழ்ப்பக்கம், பாலமடை, கட்டளை, உதயநேரி, ராஜவல்லிபுரம், பாப்பையாபுரம் போன்ற கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 50,000 பேர் சாலைக்கு மேல்புறமும், கீழ்ப்புறமும் செல்வதற்கு எந்தவிதமான பாதையும் இதுவரையிலும் இல்லை. கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி, மத்திய அரசும் சரி, மக்கள்மீது அக்கறை இல்லாத காரணத்தினால் அல்லது சரியான* planning *இல்லாத*

2013 மே 2]

காரணத்தினால், இரண்டு பாலங்களைப் போட்டு, நடுவிலே பாலம் இல்லாமல், மக்கள் செல்வதற்குப் பாதையும் இல்லாமல் ஒரு சாலையைப் போட்டுவிட்டார்கள். ஆகவே, இங்கேயிருக்கிற சுரங்கப் பாதையை மாற்றி, இரண்டு பாலங்களையும் இணைக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, ஆணையைப் பெற்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஓராண்டு கழித்து தாய் நாட்டின் தலைமையிடத்தின் தலைமைப் பதவிக்கே வரவிருக்கின்ற அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதியைப் பெற்று, இந்தப் பாலத்தைக் கட்டித் தருமாறு அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.மீ. 148/6.1.0 மற்றும் 149/7.4.0 ஆகிய இடங்களில் உயர்மட்ட மேம்பாலம் பயன்பாட்டில் உள்ளது. மேலும், 148/7.0.0.-ல் தாழ்வு மேம்பாலம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் கோரும் தாழையூத்தூரின் இருபுறங்களிலும், மேம்பாலங்கள் உள்ளன. அதாவது 1,230 மீட்டருக்கு இடைப்பட்ட தூரத்திலேயே மூன்று பாலங்கள் உள்ளதால், உறுப்பினர் அவர்கள் கோரும் சாலை மேம்பாலத்தினை அங்கே அமைக்க இயலாது. அதுமட்டுமல்லாமல், பொது மக்களுடைய தேவையைக் கருதி, தேசிய நெடுஞ்சாலை NH 7-ல் தாழையூத்தூரில் கி.மீ. 149/3.0.0.-ல் 3.5 மீட்டர் அகலத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தனியார்மூலம் சுரங்க நடைபாதை விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

[2013 மே 2

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழகம், நாளைய பாரதம். நாளையும் நமதே, நாற்பதும் நமதே. (மேசையைத் தட்டும் ஒலி) விந்தைமிகு இந்தியாவையே வியக்க வைக்கும் வீரப்புத்தகமே, எங்கள் வீரத் திருமகளே, நாம் வணங்கும் வாழும் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி வழியாகச் செல்லும் மதுரை-கன்னியாகுமரி நான்குவழிச் சாலையில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி, கேசவனேரி சந்திப்பு மற்றும் பணக்குடி வடக்கு மற்றும் தெற்கு சந்திப்பு ஆகிய பகுதிகளில் தினந்தோறும் விபத்துகள் ஏற்பட்டு, ஏராளமான மக்கள் உயிரிழக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சாலையில் மேம்பாலம் கட்டித்தர நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பொதுமக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே மேம்பாலம் வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்திலிருந்து அனுமதி பெற்றுத்தான் அங்கே மேம்பாலம் அமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியை ஆய்வு செய்து, மேம்பாலம் தேவைப்படின், மத்தியில் உள்ள

2013 மே 2]

தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அனுமதி பெற்று, மேம்பாலம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-பழங்காநத்தம்-டி.வி.எஸ். நகரை இணைக்கக்கூடிய இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 50 கோடி ரூபாயில் நடைபெற்று வருகிறது. அதேபோல, திருப்பரங்குன்றத்தில் இரயில்வே மேம்பாலப் பணியும் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் தாமதமாக நடைபெறுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, துரிதப்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு இடங்களில் பாலப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பணிகளைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 373, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

373—

கால்வாய் அமைத்தல்

***6716—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—